அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல : 11/2001

எனது இலக்கம் : ஏஆர்/19/30
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீ8மைப்பு அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு,07
2001.05.29

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

## முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி கூறுகள்

முகாமைத்துவ அபிவிருத்தி, பயிற்சி கூறுகளை அமைத்தல் மற்றும் தேசிய அரச சேவை கொள்கையொன்றை நடைமுறைபடுத்துதல் தொடர்பாகமுறையே 1989.01.31, 1990.02.28 மற்றும் 1990.09.13 ஆந் திகதிகளில் வெளியிடப்பட்ட 6/89, 12/90, 14/90 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின்பால் தங்களின் தயவான கவனத்தை ஈர்க்கப்படுகின்றது,

02. அரச சேவையின் வினைத்திறமையும் உற்பத்திப் பெருக்கத்தையும் பண்புசார் வளர்ச்சியையும் மேம்படுத்துவதற்கும் அரச நிறுவனங்களில் நிறைவேற்றப்படுகின்ற அபிவிருத்தி பணிகளை துரிதப்படுத்துவதற்குமாக முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி கூறுகளை மிகவும் வலுப்படுத்தி செயற்படுத்துவது அவசியமென அரசு கொள்கை ரீதியாக ஏற்றுக் கொண்டுள்ளது.மேற்கூறிய சுற்றறிக்கை அறிவுறுத்தலின்படி அரச நிறுவனங்களில் சிறிது காலத்திற்கு முன்னராக தாபிக்கப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி கூறுகள் இன்றும் கூட வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்ற போதிலும் பெரும்பாலானவை செயலற்ற நிலையில் உள்ளதெனதென்படுகின்ற உண்மையாகும். அரசாங்கம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிர்வாக மறுசீரமைப்பு அலுவல்களை துரிதமாக செயற்படுத்தும் தாபன கட்டுக்கோப்பாக அக் கூறுகளை மீண்டும் வெற்றிகரமாக செயற்படுத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. அதன்படி தங்கள் அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் தற்போது முகாமைத்துவ அபிவிருத்தி, பயிற்சி கூறொன்று அமைக்கப்பட்டிருப்பின் அதை வலுப்படுத்தி வினைத்திறமையுடையதாக செயற்படுத்துவதற்கும், தற்போதைக்கு அமைக்கப்படாதிருந்தால் புதிதாக அமைத்து வினைத்திறமையுடன் செயற்படுத்துவதற்கும் உரிய துரித நடவடிக்கை எடுக்கமாறும் இத்தால் கேட்டுக் கொள்கின்றேன்.

முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி கூறுகள் தொடர்பில் பின்வரும் வழிகாட்டல்களின்பால் தங்களின் தயவு கூர்ந்த கவனம் செலுத்தப்படுகின்றது.

04. **முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி கூறுகளின் நோக்கம்**

1. அரசாங்க நிறுவனங்களில் முகாமைத்துவ அபிவிருத்தி பணிகள் மீதான பொறுப்புகளை வகிப்பதற்கு தகுந்த தாபன முறைமையொன்றை ஸ்தாபித்தல்.
2. நிர்வாக மறுசீரமைப்பு அலுவல்களை வினைத்திறமையுடன் செயற்படுத்துதல்.
3. அரசாங்க நிறுவனங்களில் பயிற்சி கலாசாரமொன்றை உருவாக்குதல்.

05. **முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி கூறுகளின் கடமை பொறுப்புகள்.**

01. 02/97 ஆம் இலக்க நிர்வாக மறுசீரமைப்பு சுற்றறிக்கை ஏற்பாடுகளை நிறுவனத்தினுள் வெற்றிகரமாக செயற்படுத்துதல். அதன் கீழ் கவனம் செலுத்தப்பட வேண்டிய இடைக்கால நடவடிக்கைகள்.
   + நிறுவனத்தின் பணிப் பிரகடனத்தை தயாரித்தல்
   + நிறுவனத்தின் நோக்கங்களை நிர்ணயித்தல்
   + நிறுவனத்தின் பணிப்பொறுப்புகளை மீண்டும் கவனத்தில் கொண்டு பார்த்தல்
   + அநாவசியமான நடவடிக்கை முறைமைகளை அகற்றுதல்
   + மீண்டும் கவனத்திற் கொண்டு பார்த்த கடமை பொறுப்புகளை ஒவ்வொரு தொழில்களாக உரியவாறு ஏற்பாடு செய்து தகுந்த நபர்களிடம் ஒப்படைத்தல்
   + தொழில் விபரங்களை தயாரித்தல்

02. தாபனத்திற்காக வருடாந்த நடைமுறை நிகழ்ச்சி திட்டமொன்றை திட்டமிடுதல்.

03. அவ் வருடாந்த நடைமுறை நிகழ்ச்சி திட்டத்தை செயற்படுத்தும் பொறுப்பை ஒவ்வொரு பிரிவுகளுக்கிடையிலும் அந்தந்த பிரிவுகளின் அலுவலுக்கிடையிலும் கையளிக்க வேண்டிய விதத்தினை நிர்ணயித்தல்

04. அலுவல்களுக்காக வருடாந்த செயலாற்றுகை திட்டங்களை தயாரித்தல்.

05. அச் செயலாற்றுகை தரங்கணிப்பு வேலைத்திட்டங்களுக்கு ஏற்புடைய நடவடிக்கை முறைகளை ஏற்பாடு செய்து செயற்படுத்தல்.

06. செயலாற்று தரங்கணிப்பு அலுவல்களை பின்னராக கண்காணித்தலும் இவ் அமைச்சுடன் கூட்டிணைத்தலும்-

07. நிறுவனத்தின் செயல் நடவடிக்கை முறைகள் மற்றும் முறைமையியல்களை எளிதாக்குவதற்குரிய நடவடிக்கை எடுத்தல்.

08. பல விடயங்களுக்கு ஏற்புடையதாக நடவடிக்கை முறைகளை தயாரித்தல்.

09. அலுவலக தளக்கோலம்களை நாளதுவரைப்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும்.

10. உற்பத்திப் பெருக்க அபிவிருத்தித் வட்டங்களை அமைத்து நடைமுறைப்படுத்தல்.

11. அலுவலர்களுக்கு பயிற்சி தேவைகளை இடையிடையே கற்றறிதல்.

12. அலுவலர்களுக்கு பொருத்தமான பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களை தயாரித்து நடைமுறைபடுத்தல்.

13. பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களின் உற்பத்தி பெருக்கத்தை மீளாய்வு செய்தல்.

14. முகாமைத்துவ போட்டிகளை நடாத்துதலும் அதற்கு ஏற்புடைய அலுவல்களை ஏற்பாடு செய்தல்.

15. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகள்.
16. நிறுவனத்தின் அலுவல்களில் ஆக்கபூர்வமாக பங்குகொண்டு முகாமைத்துவ அபிவிருத்தி பணிகளை தொடருதல்.

இக் கடமைகள் நிறுவனத்தின் தன்மை,அளவு, தேவைகள் மற்றும் உள்ள வளங்களின் அடிப்படையில் சிறிதளவாக மாற்றுவதில் ஆட்சேபணை கிடையாது.

06. **முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி கூறின் அமைப்பு**

1. முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி கூறுகளின் அமைப்பு தொடர்பில் பின்வரும் நடவடிக்கை எடுக்கபட வேண்டுமென்பதுடன் அவற்றின் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வுகளும் செய்தல் வேண்டும். அமைச்சொன்றானவிடத்து செயலாளர்களினதும், திணைக்களமொன்றானவிடத்து திணைக்கள தலைவரினதும், நிறுவனமொன்றானவிடத்து நிறுவன தலைவரினதும் நேரடி கண்காணிப்பு மற்றும் வழிகாட்டலின் கீழ் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி கூறுகளை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தல்.

2. முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி கூறினை ஆரம்பித்து நடைமுறைபடுத்துவதற்காக பிரதி தாபன தலைவர் மட்டத்திலான அலுவலரொருவரை தகுந்தவாறு இனங்கண்டு அதனை அவரின் கடமையின் முக்கிய பங்காக ஒப்படைத்தல்.

3. அவ்வாறு நியமனம் செய்த அலுவலரின் பெயரை இணைப்பு தொடர்பான அலுவலர்களுக்காக இரண்டு வாரங்களுக்குள் இவ் அமைச்சுக்கு அறிவித்தலும் சம்பந்தப்பட்ட அலுவலர் மாறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அம் மாற்றம் பற்றி இவ் அமைச்சுக்கு அறிவித்தலும்.

4. நிறுவனத்தை சேர்ந்த சிரேஸ்ட மட்டத்திலான அலுவலர்களைப் போல் ஏனைய உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் கொண்ட 06 தொடக்கம் 10 வரையிலான ஓர் எண்ணிக்கையை கொண்ட ஆலோசனை குழுவொன்றை நியமிக்க வேண்டியதுடன் இவ் ஆலோசனை குழுவானது மாதத்திற்கு ஒரு முறையாவது கூட வேண்டும். சம்பந்தப்பட்ட விடயங்களை கலந்தாலோசித்து எடுக்கும் தீர்மானங்களை வழி காட்டிகளாக அபிவிருத்தி மற்றும் பயிற்சி கூறுகளுக்கு அறிவித்தல்.

5. மேற் குறிப்பிட்ட நியமனம் செய்த அலுவலருக்கு துணை புரியும் வகையில் ஒரு கூறாக அமைதவதற்கு போதிய அலுவலர்கள் கோஸ்டியொன்றை ஈடுபடுத்துதல் எவ்வாறாயினும் இதற்காக மேலதிக ஆளணி அனுமதிக்கப்படமாட்டாதென்பதுடன் உள்ளக கடமையளிப்புகளை மாற்றுவதன் மூலம் தற்போது உள்ள ஆளணிகளின் எல்லைக்குள் இவ் வேலைத் திட்டத்தை செயற்படுதுதுவதற்குரிய ஒழுங்குகளை செய்ய வேண்டும்.

07. **<u>நிதி ஒதுக்கீடு செய்தல்</u>**

இக் கூறின் ஆகு செலவுக்காக வேண்டிய நிதி ஒதுக்கீடுகளை எதிர்வரும் ஆண்டிலிருந்து ஆண்டு மதிப்பீடுகளின் மூலம் ஒதுக்கீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுவரை தற்போது ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் கீழ் மீண்டுவருஞ் செலவுகளை சிக்கனமாக பாவிப்பதன் மூலம் இவ்வேலைத் திட்டத்தை ஏற்படும் செய்யவும்.

08. இதில் 3 ஆம் பந்தியின் பிராகரம் தங்களின் அமைச்சு/திணைக்களம்/நிறுவனத்தில் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி கூறொன்றை **<u>2001,06,20 ஆந் திகதியன்று அமைத்து செயற்படுமாறும்</u>** 06:2 துணைப்பந்தியின்படி நியமனம் செய்து கொண்ட அலுவலரின் பெயர்,பதவி,முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை **<u>2001,06,20 ஆந் திகதிக்கு முன்னராக எனக்கு அறிவிப்பதற்குரிய</u>** ஒழுங்குகளை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்,

ஒப்பம்: எம்.என்.ஜுனைட்
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு